# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, ERODE

CC.No.18/2024

Date: 07.05.2026

Name: சரவணன், த/பெ.ராமலிங்கம், (PW2)

M.P.No:05/2026 எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன் என்றால், மூன்று வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொன்ன தேதியில் நான் என்ன பணிபுரிந்து வந்தேன் என்றால், காவல் நிலையத்தில் பொது தகவல் தொடர்பு அலுவலராக பணி புரிந்து வந்தேன். அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் எத்தனை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பணி புரிந்து வந்தார்கள் என்றால், எனக்கு சரிவர ஞாபகத்தில் இல்லை. அந்த சமயத்தில் காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால், இல்லை, வெளியே சென்றிருந்தார். காவல் நிலையத்தில் எனக்கு என்று தனியாக நாற்காலி மற்றும் மேஜை உள்ளதா என்றால், உள்ளது. இந்த வழக்கின் எதிரி மற்றும் எதிரியின் தயார் கோவிந்தம்மாள் சாட்சி கஸ்தூரி ஆகியோரை இந்த சம்பவத்தின் போது தான் பார்த்தேனா அல்லது அதற்கு முன்னரே பார்த்துள்ளேனா என்றால், அதற்கு முன்னரே எதிரியும், எதிரியின் தாயாரும் பலமுறை காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்கள். எதிரிக்கு சாட்சி கஸ்தூரி அளிக்க வேண்டிய தொகையை பெற்று தருவதற்கு ஏதேனும் முயற்சி செய்தோமா என்றால், பலமுறை முயற்சி செய்தோம். சம்பவத்தில் செருப்பு பயன்படுத்தியதாக சொல்லியுள்ளேன், அந்தச் செருப்பை எதிரி எந்த கையால் பயன்படுத்தினார் என்று சொல்லவில்லை என்றால், சரியல்ல, வலது கால் செருப்பு எந்த கையில் பயன்படுத்தினார் என்று எனக்கு ஞாபகத்தில் இல்லை.

2. எனது காவல் நிலையத்திலிருந்து மெயின் ரோட்டுக்கு எத்தனை தொலைவு இருக்கும் என்றால், சுமாராக 100 மீட்டர் தொலைவில் இருக்கும். எதிரி சாட்சிகளை அடித்ததாக சொன்னபோது சத்தம் கேட்டுப் பார்த்தேனா அல்லது நேரடியாக பார்த்தேனா என்றால், சத்தம் கேட்டு தான் பார்த்தேன். காவல் நிலையத்தில் என்னுடன் சேர்ந்து மொத்தமாக எத்தனை காவலர்கள் பணிபுரிந்து வருகிறோம் என்றால், 40 பேர் நிலையத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட காவலர்களின் எண்ணிக்கை, தற்போது 30 பேர் பணியாற்றி வருகிறோம். வரவேற்பாளர் மனோஜ் குமாருக்கு தனியாக மேஜை நாற்காலிகள் உள்ளதா என்றால், உள்ளது. எங்களுடைய காவல் நிலையத்திற்கு யார் வந்தாலும் வரவேற்பாளரை தாண்டி தான் உள்ளே வரவேண்டும் என்றால், சரிதான்.

3. காவல் நிலையத்திற்கு வந்து செல்லும் நபர்கள் விபரம் குறித்து பதிவு செய்வதற்கு என்று பதிவேட்டில் மனோஜ் குமார் பதிவு செய்வாரா இல்லை நான் பதிவு செய்வேனா என்றால், மனோஜ் குமார் வரவேற்பாளராக பணிபுரிந்ததால் அவர்தான் பதிவு செய்வார். வரவேற்பாளர் பணியை Shift Basis–ல் செய்யப்படுமா அல்லது மனோஜ் குமார் மட்டும் பார்ப்பாரா என்றால், இரண்டு பேர் மாறி மாறி பார்த்து வருவார்கள், மனோஜ் குமார் மற்றும் பார்த்தார், அன்றைய தினம் பார்த்த மற்றொரு நபர் வரவில்லை. எனக்கு வரவேற்பாளர் பணி பார்த்த அனுபவம் உண்டா என்றால், மனுக்களை பெறும்போது நானும் பார்த்துள்ளேன். இந்த வழக்கின் அ.சா.1 நிரஞ்சனா என்னென்ன பதிவேடுகளை பராமரித்து வருவார் என்றால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரும் மனுக்களை பெற்று அதனை பதிவு செய்து உயரதிகாரிகளுக்கு விசாரணைக்கு அனுப்பும் பணியை செய்து வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அ.சா.1 நிரஞ்சனா என்ன பணி செய்து கொண்டிருந்தார் என்றால், மனுக்களை எடுத்து வைத்து எப்போதும் போல் விசாரணைக்கு புகார்தாரர்களை வரச் சொல்லி இருந்தார். சம்பவம் எப்போது நடந்தது என்பது குறித்து சரியான நேரம் சொல்ல முடியுமா என்றால், காலை சுமார் 10.45 மணி இருக்கும்.

4. சம்பவத்தின் போது பயிற்சி காவல் கண்காணிப்பாளர் காவல் நிலையத்தில் உள்ளே இருந்தார் என்றால், சரிதான். சம்பவத்தின் போது பயிற்சி காவல் கண்காணிப்பாளர் எங்களை விசாரித்தாரா என்றால், அன்றைய தினமே விசாரித்தார்.

அ.சா.1 நிரஞ்சனாவிற்கும், சாட்சி கஸ்தூரிக்கும் எந்தெந்த இடத்தில் வெளி காயங்கள் ஏற்பட்டது என்றால், வெளி காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. எதிரிக்கும் சாட்சி கஸ்தூரிக்கும் பணம் வரவு செலவு சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் எதிரி அடிக்கடி காவல் நிலையம் வந்து எங்களை தொந்தரவு செய்த காரணத்தினால் எதிரிகளின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dopondent to be correct.

J.M. A.M.C.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, ERODE

CC.No.18/2024

Date: 07.05.2026

Name: மனோஜ்குமார், த/பெ.பிரகாஷ், (PW3)

M.P.No:05/2026 எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன் என்றால், மூன்றரை வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொன்ன தேதியில் நான் என்ன பணிபுரிந்து வந்தேன் என்றால், வரவேற்பாளராக (Data Entry operator) பணி புரிந்து வந்தேன். அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் எத்தனை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பணி புரிந்து வந்தார்கள் என்றால், சுமாராக ஒரு பத்து பேர் இருந்திருப்பார்கள். அந்த சமயத்தில் காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால், இல்லை, வெளியே சென்றிருந்தார். காவல் நிலையத்தில் எனக்கு என்று தனியாக நாற்காலி மற்றும் மேஜை உள்ளதா என்றால், உள்ளது. இந்த வழக்கின் எதிரி மற்றும் எதிரியின் தயார் கோவிந்தம்மாள் சாட்சி கஸ்தூரி ஆகியோரை இந்த சம்பவத்தின் போது தான் பார்த்தேனா அல்லது அதற்கு முன்னரே பார்த்துள்ளேனா என்றால், அதற்கு முன்னரே எதிரியும், எதிரியின் தாயாரும் பலமுறை காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்கள். எதிரிக்கு சாட்சி கஸ்தூரி அளிக்க வேண்டிய தொகையை பெற்று தருவதற்கு ஏதேனும் முயற்சி செய்தோமா என்றால, புகாரினை விசாரணை செய்த அதிகாரிகள் அது சம்பந்தமாக பலமுறை முயற்சித்தார்கள். சம்பவத்தில் செருப்பு பயன்படுத்தியதாக சொல்லியுள்ளேன், அந்தச் செருப்பை எதிரி எந்த கையால் பயன்படுத்தினார் என்று சொல்லவில்லை என்றால், சரியல்ல, வலது கையால் பயன்படுத்தினார்.

2. எனது காவல் நிலையத்திலிருந்து மெயின் ரோட்டுக்கு எத்தனை தொலைவு இருக்கும் என்றால், காவல் நிலையம் மெயின் ரோட்டில் தான் உள்ளது. எதிரி சாட்சிகளை அடித்ததாக சொன்னபோது சத்தம் கேட்டுப் பார்த்தேனா அல்லது நேரடியாக பார்த்தேனா என்றால், நேரடியாகத்தான் பார்த்தேன், நான் அங்கு தான் இருந்தேன். காவல் நிலையத்தில் என்னுடன் சேர்ந்து மொத்தமாக எத்தனை காவலர்கள் பணிபுரிந்து வருகிறோம் என்றால், 30 முதல் 35 நபர்கள் பணியாற்றி வருகிறோம். இதற்கு முன் சாட்சியம் அளித் சென்ற அ.சா.1 சரவணன்–க்கு தனியாக மேஜை நாற்காலிகள் உள்ளதா என்றால், இல்லை, எனக்கும் P.R.O சரவணன்–க்கும் சேர்த்து ஒரு டேபிள் சேர் தான். எங்களுடைய காவல் நிலையத்திற்கு யார் வந்தாலும் வரவேற்பாளரை தாண்டி தான் உள்ளே வரவேண்டும் என்றால், சரிதான்.

3. காவல் நிலையத்திற்கு வந்து செல்லும் நபர்கள் விபரம் குறித்து பதிவு செய்வதற்கு என்று பதிவேட்டில் நான் பதிவு செய்வேனா என்றால், இல்லை, கரண்ட் பேப்பர் விசாரிக்கும் அதிகரிதான் பதிவு செய்வார். வரவேற்பாளர் பணியை Shift Basis–ல் செய்யப்படுமா என்றால், இரண்டு பேர் மாறி மாறி பார்த்து வருவோம் என்னுடன் தயாநிதி என்பவர் பார்த்து வந்தார் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினம் என்று நானும் பார்த்தேன். இந்த வழக்கின் அ.சா.1 நிரஞ்சனா என்னென்ன பதிவேடுகளை பராமரித்து வருவார் என்றால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரும் மனுக்களை பெற்று அதனை பதிவு செய்து உயரதிகாரிகளுக்கு விசாரணைக்கு அனுப்பும் பணியை செய்து வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அ.சா.1 நிரஞ்சனா என்ன பணி செய்து கொண்டிருந்தார் என்றால், மனுக்களை எடுத்து வைத்து எப்போதும் போல் விசாரணைக்கு புகார்தாரர்களை வரச் சொல்லி இருந்தார், எதிரியை விசாரணைக்கு வரச்சொல்லி இருந்தால், முதல் மனுவாக விசாரணை செய்து கொண்டிருந்தார். சம்பவம் எப்போது நடந்தது என்பது குறித்து சரியான நேரம் சொல்ல முடியுமா என்றால், காலை சுமார் 10.45 மணி இருக்கும்.

4. சம்பவத்தின் போது பயிற்சி காவல் கண்காணிப்பாளர் காவல் நிலையத்தில் உள்ளே இருந்தார் என்றால், இல்லை. பின்னிட்டு சம்பவம் தொடர்பாக பயிற்சி காவல் கண்காணிப்பாளர் எங்களை விசாரித்தாரா என்றால், அன்றைய தினமே விசாரித்தார்.

அ.சா.1 நிரஞ்சனாவிற்கும், சாட்சி கஸ்தூரிக்கும் எந்தெந்த இடத்தில் வெளி காயங்கள் ஏற்பட்டதா என்றால், தடிப்பு காயங்களும் கீறல்களும் இருந்தது. எதிரிக்கும் சாட்சி கஸ்தூரிக்கும் பணம் வரவு செலவு சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் எதிரி அடிக்கடி காவல் நிலையம் வந்து எங்களை தொந்தரவு செய்த காரணத்தினால் எதிரிகளின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.